1987 மார்ச் 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாளைக்கு முழுமையாக நம்முடைய வாழ்த்துக்களை வைத்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இதுவரையில் நிகழ்ந்த சாதனைகளுக்கு நம்முடைய வாழ்த்துக்கள் உரியனவாகுக.

3. தகவல் கோரல்.

பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு வினாத்தாள் வெளியானது குறித்து.

திரு. எஸ். பி. மணவாளன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினமணி நாளிதழிலே எஸ்.எஸ்.எல்.சி. ஆங்கில கேள்வித்தாள் அவுட் என்று ஒரு செய்தி வெளியாகியிருக்கிறது. 10 ஆம் வகுப்பு ஆங்கிலம் இரண்டாவது தாள் தேர்வுக்கான வினாத் தாள்கள் விடையுடன் காஞ்சிபுரம், மதுராந்தகம், செங்கல்பட்டு போன்ற இடங்களில் ஞாயிற்றுக்கிழமை முதலே தாராளமாக விற்பனைக்கு வந்துள்ளது. சுருங்கச் சொன்னால் இந்த வினாத் தாள் அவுட்டாகிவிட்டது என்று பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. இந்த அடிப்படையில் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 'செய்தி அவுட்', இத்துடன் விடுங்கள். முழுமையாக இங்கே சொல்ல வேண்டாம். கல்வி அமைச்சரும் வரவில்லை. பொது நலன் கருதி எழுப்பி விட்டீர்கள். இத்துடன் விடுங்கள் (குறுக்கீடு).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் செய்தி வந்திருக்கிறது. அதுபற்றி முழுமையையும் ஆராய்ந்து நிலைமையை அறிவிக்கின்ற தன்மை ஏற்படுகின்றவரையில் அதுபற்றி எதுவும் கூறுவதற்கில்லை. மேலும் இதுபற்றிய முழுமையான விவரமும் என்னிடத்தில் இல்லை. அதை கல்வித் துறைதான் ஆராய வேண்டும். மேலும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இந்த நிலையில் முழு விவரத்தையும் சொல்லும் நிலையில் இருப்பார்களா என்று சொல்லுவதற்கில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தப் பிரச்சினையை எழுப்பியிருப்பதன்

காரணமாக மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், கல்வித் துறை, நிலைமையை ஆராய்ந்து வாய்ப்பு ஏற்படும்போது இந்த அவைக்கு அதுபற்றிய விவரக் குறிப்புகளை அளிப்பார்கள்.

4. கவன ஈர்ப்பு.

(அ) ஆலங்குளம் சிமெண்ட் ஆலை தூசியினால் பயிர்கள் பாதிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் வி. பாலகிருஷ்ணன், எ. எஸ். எ. ஆறுமுகம் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. வி. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காமராஜர் மாவட்டம், ஆலங்குளத்திலுள்ள தமிழ்நாடு சிமெண்ட் ஆலைக் கழிவுப் புகையினால், பல விவசாயிகளின் விளைநிலங்களும், புன்செய் பயிர்களும் பலன் தராமல் கெட்டுப் போவதால் அந்தப் பகுதி விவசாய மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

திருவாளர்கள் தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பொரேஷன் லிமிடெட் ஆலங்குளம் தொழிற்சாலை, காமராஜ் மாவட்டத்தில் இராசபாளையத்திற்கு அருகில் அமைந்துள்ளது. இத்தொழிற்சாலை 1970 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. இத்தொழிற்சாலை மாதமொன்றுக்கு 30,000 மெட்ரிக் டன் போர்ட்லண்ட் போஸலோனா சிமெண்ட்டும் 3,300 மெட்ரிக் டன் சாதாரண போர்ட்லண்ட் சிமெண்ட்டும் தயாரிக்கிறது.